**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.4/20**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்புராம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முத்துகிருஷ்ணன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வெங்கடாஜலபுரம் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.24

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கில் எதிரிகள் ஆஜராவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1ம் எதிரி ஜெகதீசை எனக்கு தெரியும், 2ம் எதிரி வனஜா 1ம் எதிரியின் தாயார். 3ம் எதிரி தாமஸ்ராஜ் 1ம் எதிரியின் உதவியாளர். 4ம் எதிரி சுதாகரன் 1ம் எதிரியின் உதவியாளர். கடந்த 2015ம் வருடம் எனது இடத்தை சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானமாக வைத்து ரூ3,50,000/–த்தை கடனாக பெற்றிருந்தேன். மாதம்தோறும் கடன் தொகையை திருப்பிசெலுத்தி வந்தேன். ரூ1,95,900/–ம் பாக்கி கடன் நான்திருப்பி செலுத்தவேண்டியிருந்தது. அப்போது நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன். அப்போது ஜெகதீசன் என்னிடம் வந்து 10லட்சம் ரூபாய் தனியார் வங்கியில் கடன் வாங்கி தருவதாகவும்,அதை வைத்து விவசாய வேலைகள் செய்துக்கொள்ளுமாறு என்னிடம் ஆசைவார்த்தை கூறினார். மேலும் ஜெகதீசன் என்னிடம் நான் வங்கியில் செலுத்தவேண்டிய பணம் ரூ1,95,900/–த்தை நான் சரிசெய்துவிட்டேன் என்றும், மேலும் கடன் பெறுவதற்கான ஆவணங்களை தயார்செய்துவிட்டேன் என்று கூறி என்னை அழைத்தார். 28.5.18 அன்று சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் வைத்து எனது மனைவியிடம் 3 காசோலைகளில் கையெழுத்து மட்டும் வாங்கி கொண்டு ரூ1,95,900/–த்தை எங்களிடம் கொடுத்தார். நான் அந்த பணத்தை சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் செலுத்திவிட்டேன். அப்போது எதிரிகள் மறுநாள் என்னை பத்திர அலுவலகத்திற்கு வருமாறு

சொல்லிவிட்டார்கள். 29.5.18 அன்று எதிரிகள் ஜெகதீசன், தாமஸ்ராஜ், சுதாகர் ஆகியோர் என்னை ஆட்டோவில் பத்திர அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு என்னிடம் கையெழுத்து கேட்டார்கள்.நான் கையெழுத்து போட்டேன். நான் மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டேன். 2 மாதம் கழித்து தேனி காவல்நிலையத்தில் இருந்து ராஜேஷ் என்ற நபர் பத்திரிக்கையில் என்னுடைய பெயரையும் ஜெகதீசனுடைய போன் நம்பர் முகவரியை கொடுத்து விளம்பரம் கொடுத்துள்ளார்கள் என்று புகார் வந்ததாக கூறி போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது போலிசார் ஜெகதீசன் என்னுடைய நிலத்தை ஏமாற்றி தன்னுடைய அம்மா வனஜா பெயரில் கிரயம் முடித்துவிட்டார் என்று சொன்னார்கள். அதன்பின்னர் பத்திர பதிவு அலுவலகம் சென்று வில்லங்க சான்று பெற்று பார்த்த போது வனஜா பெயரில் நிலம் பதியப்பட்டிருந்தது. அதன்பின்னர் காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. 1.6.18 ம் தேதியிட்ட 1ம் எதிரி 2ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் நகல் அசாஆ.2. 28.5.18 ம் தேதியிட்ட பொதுஅதிகார ஆவணம் நகல் அசாஆ.3. 11.9.2018 ம் தேதியிட்ட மெமோரண்டம் ஆப் டெப்பாசிட் ஆப் டைட்டில் அசாஆ.4. 18.10.2002 ம் தேதியிட்ட புகார்தாரருக்கு ராஜ் மற்றும் ஜெகதீசன் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் நகல் அசாஆ.5. 11.9.2018 ம் தேதியிட்ட ஜெனரல் பவர் ரத்து பத்திரம் அசாஆ.6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 3ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். வெளிநாட்டில் நான் 5 வருடமாக வேலை பார்த்தேன். என்னுயைட சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் ஆலங்குளம் ஆகும். தேனியில் டிசிஎஸ்பியாக வேலை பார்த்த முத்துராஜ் என்பவர் எங்கள் ஊருக்கு பக்கத்து ஊருக்கார் என்றால் சரியல்ல. நானும் அவரும் நண்பர் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. திண்டுக்கல் ஜெகநாதனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஜெகநாதனிடம் நான் ரூ. 6 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லி தேனி விரைவு நீதிமன்றத்தில் என் மீது STC.No.11/2017 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் மேற்படி வழக்கு முடிந்துவிட்டது. 1ம் எதிரி ஜெகதீசன் என்பவரிடம் இருந்து மேற்படி 6 லட்சம் கடன்

வாங்கி ஜெகநாதனுக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஜெகதீசனிடமிருந்து நான் 18 பால்மாடுகள் வாங்கினேன் என்றால் சரியல்ல. அதற்கு 8 லட்சம் என பேசி மேற்படி தொகையை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 4 ம் எதிரி சுதாகரிடமிருந்து கைமாற்ற கடனாக 2 லட்சம் பெற்றிருந்தேன் என்றால் சரியல்ல. மொத்தம் ரூ. 14 லட்சம் எதிரிக்கு தரவேண்டிய நிலுவை தொகை இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் நடந்த பஞ்சாயத்தில் ரூ.14 லட்சத்தை வங்கியில் கடன் பெற்று தருகிறேன் என பேசப்பட்டது என்றால் சரியல்ல. 2018 ஏப்ரல் 15ம் தேதியில் 14 லட்சத்தை கொடுக்கவில்லை என்றால் நிலத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் கூறினேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் டிஎஸ்பியிடம் கொடுத்தது என்றால் சரியல்ல. எஸ்பியிடம் கொடுத்தேன். 28.11.18 ம் தேதி டிஎஸ்பியிடம் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் எஸ்பியிடம் தான் நான் புகார் கொடுத்தேன். இந்த புகாருக்கு முன்பு 29.8.18 ம் தேதி டிஎஸ்பியிடம் புகார் கொடுக்கப்பட்டு அதன் பேரில் என்னையும் எதிரியையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணையில் நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் ஆஜராகவில்லை என்றும் முடித்து வைக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் எதிரி ஒ.எஸ்.208/18 என தேனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 29.8.18 அன்று நிலஅபகரிப்பு பிரிவிலும் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முகாந்திரம் இல்லை என முடித்து வைக்கப்பட்டது என்றால் என்னை அழைத்து விசாரித்தார்கள். மேற்படி புகார்களின் பேரில் நடவடிக்கை எடுக்கபடவில்லை என நான் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய புகாரிகளில் முகாந்திரம் இல்லை என எனது மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என் மனைவியிடம் 3 காசோலைகளை கையெழுத்து மட்டும் போட்டு எதிரிகள் பெற்றுக்கொண்டதாக வீரபாண்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் உண்மை தன்மை இல்லை என முடிக்கப்பட்டது என்றால் நீதிமன்றத்தை அணுகும்படி கூறிவிட்டார்கள். மேற்படி புகாரின் மீது உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தேன் என்றும் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னை போலிசார் புகார்

கொடுத்தன்று காவல்நியைத்திலும் அதன்பின்பு வீட்டில் வந்தும் விசாரித்தார்கள். போலிச்விசாரணையில் மேற்படி விபரங்களை கூறினேன். போலிசார் விசாரணையில் நான் 18 மாடுகள் வாங்கி கொண்டதற்காக 4 லட்சம் திருப்பி தரவேண்டியிருக்கிறது என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் நா்னதிருப்பி செலுத்தவேண்டிய 1,96,900/–த்தை 1ம் எதிரி செலுத்தினார் என்றால் சரிதான் அதற்கான அவர் காசோலை வாங்கிகொண்டார். நான் தேனி சார்பு நீதிமன்றத்தில் 1,2 எதிரிகளுக்கு எதிராக சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும் எனது மனைவியும் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வழக்கில் 1ம் எதிரிக்கு நான் பவர் பத்திரம் கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 20.8.18 ம் தேதி நான் 1ம் எதிரிக்கு ஒரு பதிவு தபால் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதில் 29.5.18 ம் தேதி நான் தங்கள் பெயரில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் முருகதாஸ் மூலம் 20.8.18 ம் தேதி நானும் எனது மனைவியும் சேர்ந்து ஒரு வழக்கறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதில் எழுதாத 3 பச்சைபேப்பரில் கையெப்பம் மட்டும் பெற்றுக்கொண்டதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்த போது 1 முதல் 4 எதிரிகள் என்னை காரில் அழைத்து சென்றதாக போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அசாஆ 1 புகாரில் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து பெற்றுக்கொண்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 28.5.18 ம் தேதி எதிரிகள் என்னை ஆசைவார்த்தை கூறி ஆட்டோவில் அழைத்து சென்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த வங்கியில் எனக்கு கடன் பெற்றுதருவதாக ஆசைவார்த்தை கூறினார் என்றால் தனியார் வங்கி என கூறினார். நான் பத்திர அலுவலகம் சென்ற போது பத்திர அலுவலர் பவர் பத்திரம் பதிய சம்மதமாக என கேட்டபின்பு தான் பதிவு செய்வார்கள் என்றால் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. பவர் பத்திரத்தை இரத்து செய்யும் போது என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். எனக்கு மஞ்சாள் காமலையின் காரணமாக கல்லீரல் பாதிக்கப்பட்டு எந்த மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் அரசு மருத்துவமனை மற்றும் சங்கர்லால் மருத்துவமனை, ராதாகிருஷ்ணன் மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்படி மருத்துவமனைகளில்

நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் 1ம் எதிரிக்கு கொடுக்கவேண்டிய கடன் தொகைக்காக எனக்கு சொந்தமான சொத்தை பவர் ஆவணமாக எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தின் மதிப்பு 60 லட்சம் இருக்கும். அது 1 ஏக்கர் 76 செண்ட் ஆகும். என்னிடம் காட்டப்படும் அசாஆ. 2 ஆவணத்தில் 1 ஏக்கர் நிலம் 1,30,000 என காட்டப்பட்டுள்ளது என்றால் அது அரசாங்க மதிப்பு ஆகும். என் மாமானார், மாமியாரை எதிரி தாக்கிவிட்டதாக வீரபாண்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் எதிரிக்கு தண்டனை வழங்க்பபட்டது என்றும், 2, 3 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்து அதில் 1ம் எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது மனைவியும் சேர்ந்து 21.12.20 ல் 1, 4 எதிரிகள் அசல் ஆவணங்களை பிடுங்கி கொண்டு கசென்றுவிட்டதாக நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் 5 லட்சம் பணத்தை கொடுத்தால் தான் பத்திரத்தை தருவதாக கூறியதாக காட்டப்படடுள்ளது என்றால் சரிதான். அது சம்மந்தமாக தேனி கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றும் அதில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் தெரியாது. என்னை ஏமாற்றி எதிரி விளம்பரம் கொடுத்ததாக கூறப்படும் மாலை மலர் பேப்பரை போலிச்விசாரணையில் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் நான் புகார்தாரர் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் ஒரு எதிரி என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 1ம் எதிரிக்கு சம்மந்தம் இல்லை என சொல்லி மதுரை உயர்நீதிமன்றகிளையில் வழக்கு தாக்கல் செய்து அதன் பேரில் 1ம் எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் அது எனக்கு தெரியாது . எதிரிக்கு நான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு அதை மீண்டும் அவரிடமிருந்துகைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் அவர் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார்கள் அனைத்திலும் எதிரி குற்றமற்றவர் என் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கொடுத்த பவர் ஆவணமும், எதிரியின் அம்மா பெயரில் உள்ள ஆவணமும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அது எனக்கு இறுதியில் தான் தெரியும். எதிரிகளாக எந்த ஆவணத்தையும் தயார் செய்யவில்லை என்றால்

சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் முழுவிபரங்களும் அது சம்மந்தமான ஆவணங்கள் எனக்கு தெரியும் என்றும் அது தெரியாது என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் ஒரே புகாரில் முழுசம்பவத்தையும் கூறியிருப்பேன் என்றும் அவ்வாறு நடக்காததால் தா்ன பல்வேறு புகார்கள் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பெரியகுளம் சாராட்சியிரிடம் எதிரி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவை இரத்து செய்யவேண்டும் என மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வனஜா பெயரில் உள்ளது. இந்த புகாருக்கு முன்பு 3.9.18ம் தேதியில் தேனி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி புகாரின் மீது மேல்நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றால் அப்போது நான் மருத்துவமனையில் இருந்தேன் எனக்கு தெரியாது.